**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**ஐ.டி.ஓ.பி. எண். 7/2025**

**ம.சா. 2**

நாள்: 07.03.2026 .

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 07ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நீலாமணி | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

முதன்மை விசாரணை:

நான் இம்மனுவில் மனுதாரரின் சகோதரி ஆவேன். எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

என் தம்பி எதிர்மனுதாரரை காதலித்து திருமணம் செய்துள்ளனர் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பே, பெண் பார்க்கும் நிகழ்வு, நிச்சயதார்த்தம் ஆகியவை முடித்துதான் திருமணம் ஆனது என்றால் சரிதான். திருமணத்தின் போது எதிர்மனுதாரர் சீர்வரிசை பொருட்களை கொண்டுவந்தார்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு குழந்தை பிறந்தபோதும், பின்னரும் பராமரிப்பு செலவுகள் அனைத்தும எதிர்மனுதாரர் தரப்பினர்தான் செய்தனர் என்றால்

சரிதான். அவ்வாறு குழந்தை பிறந்தபோது, நானும் மனுதாரரும் எவ்வித செலவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு எங்கு எப்போது குழந்தை பிறந்தது என்றால் 06.10.2020 ம் தேதி அரசு மருத்துவமனையில் குழந்தை பிறந்தது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 19.10.2020 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தேதி மாற்றி சொல்லிவிட்டேன். நான் குழந்தையை சென்று பார்க்கவில்லை என்றாலும், அதனால்தான் நான் தேதி மாற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரர் என் தம்பியுடன் சேர்ந்து வாழ வேண்டி இரண்டு மூன்றுமுறை திருவாடானை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான், ஆனால் பொய்யான விவரங்களை சொல்லி புகார் கொடுத்தார். மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ நானோ, மனுதாரரோ ஊர் பெரியவர்களிடமோ, போலிசிடமோ மனு எதுவும் கொடுத்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஊர் பெரியவர்களிடம் மனு கொடுத்தோம். அந்த மனுவின் நகலையோ, எந்த தேதியில் அவ்வாறு பேச்சு வார்த்தை நடந்தது என்ற விவரத்தையோ எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

என் தம்பியின் குழந்தைக்கு மொட்டை போட்ட நிகழ்விற்கு நான் கலந்து கொள்ளவில்லை என்றால் சரிதான், ஆனால் என் தம்பி கலந்து கொண்டான். நான் திருமணமாகி கணவருடன் வெளியூரில் வசித்து வருவதால், என் தம்பியும் எதிர்மனுதாரரும் எவ்வாறு வாழ்ந்து வந்தனர் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் தம்பி என்ன காரணங்களை கூறி என்ன மனு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை, மனுதாரர் வழக்கறிஞர் தயார் செய்தார், அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என் தம்பி சேர்ந்து வாழ எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல்,

பொய்யான சங்கதிகளை கூறி இந்த விவாகரத்து மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .